# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515580

ஆணை நாள் 07.05.2026

**முன்னிலை**

**திரு.ரா.பிரியகுமார், பி.எஸ்.சி, பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 16500/B/2024**

திரு.T.S.சரவணன் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி இயக்குநர்,
அரசு கல்லூரி கல்வி இயக்ககம்,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015. — பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தால் இன்று (07.05.2026) நடத்தப்பட்ட விசாரணைக்கு மனுதாரர் திரு.T.S.சரவணன் அவர்கள் ஆஜராகவில்லை. பொது அதிகார அமைப்பின் சார்பாக, திருமதி.ஆர்.உமாமகேஸ்வரி, உதவி இயக்குநர்(அரசு கல்லூரிகள்), அரசு கல்லூரி கல்வி இயக்ககம், சைதாப்பேட்டை, சென்னை அவர்கள் ஆஜரானார்.

2. மனுதாரர் 18.12.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(3)ன் கீழ் தாக்கல் செய்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில், இவ்வழக்கு இன்று (07.05.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இம்மேல்முறையீடானது மனுதாரர் 09.01.2024 அன்று தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)-ன் கீழ், அரசு பெண்கள் கலைக்கல்லூரியில் ஆண் பேராசிரியர் மற்றும் உதவி பேராசிரியர், பகுதி ரேந பேராசிரியர் பணியுரியலாமா என்பது உள்ளிட்ட 6 இனங்களில் தகவல்கள் வழங்கக்கோரி தாக்கல் செய்த மனு மற்றும் 18.03.2024 அன்று சட்டப்பிரிவு 19(1)-ன் கீழ் தாக்கல் செய்த முதல் மேல்முறையீடு ஆகியவற்றின் அடிப்படையில் ஆனதாகும்.

3. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்கள் ஏற்கனவே 26.04.2024ம் தேதியிடப்பட்ட கடிதம் வாயிலாக வழங்கியுள்ளதாகத் தெரிவித்து, உரிய ஆவணங்களை ஆணையத்தின் முன்பு சமர்ப்பித்ததார். மனுதாரர் இன்றைய விசாரணையில் ஆஜராகி அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் குறித்த அவரது கருத்தினை தெரிவிக்க தவறியுள்ளார்.

4. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில், ஆவணங்களின் அடிப்படையில் பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து, இவ்வழக்கில் மேலும் விசாரணை மேற்கொள்ள முகாந்திரம் ஏதுமில்லை என கருதி, இவ்வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்து இவ்வாணையம் ஆணையிடுகின்றது.

**ஒம்/-ரா.பிரியகுமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16500B/2024</u>**
**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
உதவி இயக்குநர்,
அரசு கல்லூரி கல்வி இயக்ககம்,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

திரு.T.S.சரவணன்,
எண்.34, கலித்தொகை தெரு,
செந்தமிழ் நகர்,
சிவகங்கை - 630 562.

Copy to: File
Sj/Ps- 13/05/2026